**மே – 06**

# தேசியச் செய்திகள்

## NIRF 2018

❖ இந்தியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களை தரவரிசைப்படுத்துவதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது தேசிய நிறுவனங்கள் தரவரிசைக் கட்டமைப்பு (The National Institutional Ranking Framework - NIRF) எனும் முறையை ஏற்றுக் கொண்டுள்ளது.

❖ பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகள், பொறியியல் நிறுவனங்கள், மேலாண்மை நிறுவனங்கள், மருந்தியல் நிறுவனங்கள் மற்றும் கட்டிடவியல் நிறுவனங்கள் போன்ற வெவ்வேறுபட்ட வகையான நிறுவனங்கள் அவற்றின் செயல்பாட்டுப் பகுதிகளின் (Areas of Operation) அடிப்படையில் தனித்தனி வகைகளில் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

❖ NIRF-ன் மூன்றாவது பதிப்பானது கல்வி நிறுவனங்களுக்கான இந்தியத் தரவரிசைகள் 2018-ன் ஒரு பகுதியாக இந்தாண்டு வெளியிடப்பட்டது.

❖ இந்தத் தரவரிசையில் 2809 நிறுவனங்கள் 9 பிரிவுகளில் பங்கேற்றன. மொத்தமாக இந்நிறுவனங்கள் 3954 தனிப்பட்ட விவரங்களை சமர்ப்பித்தன. சில நிறுவனங்கள் பலதரப்பட்ட துறைகள் மற்றும் பிரிவுகளில் விவரங்களை சமர்ப்பித்தன. இந்நிறுவனங்களில் 301 பல்கலைக் கழகங்கள், 906 பொறியியல் நிறுவனங்கள், 487 மேலாண்மை நிறுவனங்கள், 286 மருந்தியல் நிறுவனங்கள், 101 மருத்துவ நிறுவனங்கள், 71 சட்ட நிறுவனங்கள், 59 கட்டிடக்கலை நிறுவனங்கள் மற்றும் 1087 பொதுப் பட்டப்படிப்பு கல்லூரிகள் (General Degree Colleges) ஆகியவை அடங்கும்.

## பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளல் திட்டம்

❖ சுற்றுலா அமைச்சகமானது கலாச்சார அமைச்சகம் மற்றும் இந்தியத் தொல்லியல் துறை ஆகியவற்றுடன் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளல் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

❖ இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பாரம்பரியத் தளங்களில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்துவர்.

❖ மோனுமென்ட் மித்ரா (Monument Mitra) என அழைக்கப்படும் இவை அந்நிறுவனங்களின் பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை செயல்பாட்டின் கீழ் அப்பகுதிகளை ஏற்கின்றன.

## 8-வது நாடகமேடை ஒலிம்பிக்ஸ்

❖ இந்தியாவின் 17 நகரங்களில் 51 நாட்கள் நடைபெற்ற 8-வது நாடகமேடை ஒலிம்பிக்ஸ் மஹாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் நிறைவு பெற்றது. இது இந்தியாவின் செழுமை மிகுந்த பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை காட்சிப்படுத்தியது.

❖ இது புதுதில்லியின் செங்கோட்டையில் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா

நாயுடு அவர்களால் பிப்ரவரி 2018-ல் தொடங்கி வைக்கப்பட்டது.

- இந்த 8-வது நாடகமேடை ஒலிம்பிக்ஸ் ஆனது மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நாடகப் பள்ளியால் நடத்தப்பட்டது.
- இவ்விழாவின் கருத்துரு : "நட்பிற்கான கொடி".

## தேசிய டிஜிட்டல் தொலைத் தொடர்புக் கொள்கை 2018 – வரைவுப் பதிப்பு

- ஒவ்வொரு குடிமக்களுக்கும் 50 Mbps அளவிலான அகலக் கற்றையின் (Broad band) அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசு தேசிய டிஜிட்டல் தொலைத் தொடர்புக் கொள்கை 2018 எனும் புதிய தொலைத் தொடர்புக் கொள்கைக்கான வரைவை வெளியிட்டுள்ளது. இந்தக் கொள்கையானது, 2020ல் இந்தத்துறையில் 100 மில்லியன் டாலர் முதலீட்டை ஈர்ப்பதோடு 40 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- உலகளாவிய அலைக்கற்றை பரவெல்லையை ஏற்படுத்தித் தரும் இந்த கொள்கையானது டிஜிட்டல் தொலைத்தொடர்புத் துறையில் கூடுதலாக 4 மில்லியன் பணிகளை ஏற்படுத்துதல், 2017-ல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான டிஜிட்டல் தொழில்நுட்பத் துறையின் பங்களிப்பான 6%-ஐ 8% ஆக உயர்த்துதல், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுக்கான இந்தியாவின் பங்களிப்பை மேம்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் இறையாண்மையை உறுதி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.
- இந்தக் கொள்கை, 2017 ஆம் ஆண்டில் செய்தி தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக் குறியீட்டில் 134-வது இடத்திலிருந்த இந்தியாவை முதல் 50 இடங்களுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் செயல்முறைகள், தொடர்புடையனவாய், வெளிப்படையுடையனவாய், பொறுப்புடைமையுடையனவாய் மற்றும் முன்னோக்கிய பார்வையுடையனவாய் தொடர்வதை உறுதிசெய்ய ஒழுங்குமுறை சீரமைப்புகளை (Regulatory Reforms) மேற்கொள்வதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலீடுகள், புத்தாக்கம் மற்றும் நுகர்வோர் நலன் ஆகியவற்றை பாதிக்கும் ஒழுங்குமுறை தடைகளை நீக்குதல், மற்றும் ஒழுங்குமுறை சுமைகளை குறைத்தல் போன்றவற்றையும் இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வணிகம் செய்தலை எளிதாக்குதலை மேம்படுத்துவதற்காக நிறுவனங்களின் உரிமக் கட்டணங்களை மறுமதிப்பாய்வு செய்தல், நிறமாலை பயன்பாட்டிற்கான கட்டணங்கள், உலகளாவிய சேவை கடமை நிதிகள் ஆகியவற்றை வசூலித்தல் மூலமாக கடனால் ஸ்தம்பித்திருக்கும் தொலைத் தொடர்புத் துறைகளின் பிரச்சினைகளை குறியிட்டுக் காட்டுவதற்கும் இந்த வரைவுக் கொள்கை முன்மொழிகிறது.
- டிஜிட்டல் தொலைத் தொடர்புகளுக்கான உபகரணங்களின், உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் ஆகியவற்றின் மீதான வரிகள் மற்றும் வரிவிதிப்புகளை திறனான முறையில் முறைப்படுத்துவதற்கும் (Rationalize) இந்த வரைவுக் கொள்கை முன்மொழிகிறது.
- இதன் நோக்கங்கள் 2022-ல் அடையப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா – சாவோ டோம் மற்றும் பிரின்செப்

- பாரம்பரிய முறையிலான மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றில் கூட்டுறவிற்காக இந்தியா மற்றும் சாவோ டோம் மற்றும் பிரின்செப் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றிற்கான முன்மொழிவை மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது.
- ஆயுர்வேதம், யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி, சித்தா, சோவா – ரிக்பா மற்றும் ஹோமியோபதி உள்ளிட்ட மருந்துகளின் பாரம்பரிய முறைகளை மேம்படுத்துதல், பரப்புதல் மற்றும் உலகறியச் செய்தல் போன்ற கடமைகளை ஆயுஷ் அமைச்சகம் கொண்டுள்ளது.
- பாரம்பரிய மருத்துவத்தில் கூட்டுறவிற்காக ஏற்கனவே, ஆயுஷ் அமைச்சகம் மலேசியா, டிரினிடாட் மற்றும் டொபாகோ, ஹங்கேரி, வங்கதேசம், நேபாளம், மொரிசியஸ், மங்கோலியா, ஈரான் போன்ற நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து பல்வேறு திறனான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## கொரிய நாடுகளின் மாநாடு

- வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் மற்றும் தென் கொரிய அதிபர் மூன் ஜாயே-இன் ஆகிய இருவரும் கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்களிலிருந்து விடுபடச் செய்வதை ஒப்புக் கொண்டுள்ளனர்.
- கொரிய நாடுகளுக்கிடையேயான மாநாடுகள் ஆனது இரு கொரிய நாடுகளின் தலைவர்களுக்கிடையேயான சந்திப்பு ஆகும். இது வரையில் இரு கொரிய நாடுகளின் தலைவர்களுக்கிடையே மூன்று முறை (2000, 2007 மற்றும் 2018) சந்திப்பு நடைபெற்றுள்ளது. தென்கொரியாவின் பகுதியான கூட்டு பாதுகாப்புப் பகுதியில் (Joint Security Area) ஏப்ரல் 27, 2018 அன்று நடைபெற்ற, கொரிய நாடுகளுக்கிடையேயான மாநாடு ஆனது இந்த இரு நாடுகளுக்கிடையேயான மூன்றாவது மாநாடு ஆகும்.
- 1953 ஆம் ஆண்டு கொரியப் போர் முடிவடைந்ததிலிருந்து தென் கொரியாவிற்கு வருகை தந்த முதல் வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் ஆவார்.
- இந்த சந்திப்பானது 1953-ல் கொரியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் (Armistice Agreement) பிறகு இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையேயான மூன்றாவது சந்திப்பாகும். இம்மாநாடு முதல்முறையாக தென் கொரியாவில் நடைபெற்றது.
- 1953ல் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட போரை முறைப்படி முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா மற்றும் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக இருநாட்டுத் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்
- பத்தாண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் கொரிய நாடுகளுக்கிடையேயான முதல் மாநாட்டின் ஒரு பகுதியாக இரு கொரியத் தலைவர்களும் இராணுவ நடவடிக்கையல்லாத பகுதியில் (Demilitarised Zone) பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த மாநாடு கொரியத் தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பகுதியாக மாற்றுவது மற்றும் இரு கொரிய நாடுகளுக்கிடையேயான நிரந்தர அமைதி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டு இரு நாடுகளுக்கிடையே முறைப்படி போரை முடிவுக்குக் கொண்டு வர அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதென, கிம் ஜாங் உன் மற்றும் மூன் ஜாயே ஆகிய இருவரும் அமைதி இல்லத்தில் (Peace House) மூன்று பகுதி பிரகடனத்தில் கையெழுத்திட்டு உறுதியேற்றுள்ளனர். (Three Part Declaration)
- இந்தப் பிரகடனம் கொரிய நாடுகள், வடகொரியாவின் காயேசோங்கில் தகவல் தொடர்பு அமைப்பை நிறுவவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் தமது பணியைத் தொடரும் எனத் தெரிவிக்கிறது. இந்த இரு கொரிய நாடுகளும் ஆகஸ்ட் 15 அன்று குடும்பங்களை மீண்டும் இணைத்தல் நிகழ்ச்சியை நடத்த உள்ளது. (Family Reunion).

## தெற்காசிய பொருளாதார கவன அறிக்கை

- உலக வங்கி தன்னுடைய ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் தெற்காசிய பொருளாதார கவன அறிக்கையில் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2018ல் 7.3% ஆகவும், 2019 மற்றும் 2020ல் 7.5% ஆகவும் இருக்குமென தெரிவித்துள்ளது.
- ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை உள்ளடக்கிய சமீபத்திய பொருளாதார மேம்பாடுகள் மற்றும் குறுகிய காலத்திற்கான பொருளாதாரப் பார்வையை வெளியிடும் தெற்காசிய பொருளாதார கவன அறிக்கையானது ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் (Biannual) அறிக்கையாகும்.
- 2018 ஆம் ஆண்டிற்கான இவ்வறிக்கை தெற்காசிய பொருளாதார கவனம், வசந்தகாலம்: 2018 வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி? எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

## முன்னுரிமைக்கான பொதுமைப்படுத்தப்பட்ட அமைப்பு

- இந்தியா , இந்தோனேசியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளின் தகுதியை GSP எனும் திட்டத்தை அவை அமல்படுத்துவது தொடர்பான திட்டங்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப் போவதாக அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் முறைப்படி அறிவித்துள்ளனர் .
- வரி அனுகூலத் திட்டத்தின் கீழ் (Tax Benefit Scheme) அமெரிக்க சந்தைகளில் குறிப்பிட்ட பொருட்களின் வரியற்ற அணுகலைப் பெறுவதற்கான இந்தியாவின் தகுதியை மறுமதிப்பீடு செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.
- GSP என்பது 1976 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைத் திட்டமாகும். பொருட்களின் வரியற்ற உள்நுழைவை அனுமதிப்பதன் மூலம் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு இம்முன்னுரிமை அமெரிக்க அரசால் வழங்கப்படுகிறது.
- GSPயின் கீழ், GSPயில் அல்லாத ஏற்றுமதியாளர்களுக்கு விதிக்கப்படும் வரியை ஒப்பிடும் போது அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு குறைந்த அளவிலான இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது.
- அமெரிக்க காங்கிரஸ் மன்றமானது மார்ச் 2018-ல், 2020 வரையில் செல்லுப்படியாகத் தக்க வகையில் GSP-யை புதுப்பிக்க வாக்களித்துள்ளது.

## இந்தியா – ஜப்பான் ஆற்றல் உரையாடல்

- 9-வது இந்தியா – ஜப்பான் ஆற்றல் உரையாடல் புதுதில்லியில் நடைபெற்றது.
- மூன்றாவது மற்றும் ஏழாவது மிகப்பெரிய பொருளாதார நாடுகளான ஜப்பான் மற்றும் இந்தியா, பின்வருவனவற்றை கூட்டாக அங்கீகரித்துள்ளன.
  - நம்பகமான, தூய்மையான மற்றும் பொருளாதார ஆற்றலின் அணுகல் என்பது இவ்விரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான ஒன்று.
  - பருவநிலை மாறுபாடு மீதான ஐ.நா கட்டமைப்பு மாநாட்டின் ஆதரவின் கீழ் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை செயலாக்கம் செய்தல்
  - கார்பன் நீக்கத்தை (De-carbonisation) தெளிவாக உணர்வதற்காக ஹைட்ரஜன் உட்பட அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களின் உருவாக்கம் மற்றும் பயன்படுத்தலின் (deployment) முக்கியத்துவம்.
  - அடுத்த தலைமுறை / பூஜ்ஜிய உமிழ்வு (கரி) வாகனங்களின் மீதான கொள்கை பேச்சுவார்த்தைக்கு இசைவு அளிப்பதன் மூலம் மின்னணு வாகனங்களின் உருவாக்கத்தை நோக்கிய விவாதத்தை தொடங்குதல்.
  - இரு நாடுகளிலும் ஆற்றல் கலவையில் நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தியின் தொடர் முக்கியத்துவத்தை அறிவுறுத்தல்.
  - நிலக்கரி பயன்படுத்தும் ஆற்றல் நிலையங்களுக்கான (Coal – fired power plants) சுற்றுச்சூழல் அளவீடுகளின் மீதான கூட்டுறவை ஊக்குவித்தல்.
  - இலக்குக் கூறினை (Destination Clause) தளர்த்தல் மூலம் விரிவாக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான திரவ இயற்கை எரிவாயுவினை ஊக்குவித்தல்.

# பொருளாதாரச் செய்திகள்

## மாநிலத்திற்குள்ளேயான இ-வே ரசீது அமைப்பு

- பின்வரும் மாநிலங்களில் 15 ஏப்ரல், 2018 லிருந்து மாநிலத்திற்குள்ளேயான பொருட்களின் நகர்விற்கு இ-வே ரசீது அமைப்பு செயலாக்கம் செய்யப்படும்.
  - ஆந்திரப்பிரதேசம்
  - குஜராத்
  - கேரளா
  - தெலுங்கானா
  - உத்திரப்பிரதேசம்
- முடிவாக, இது நாடு முழுவதும் ஒற்றை இ-வே ரசீது அமைப்பின் பயன்பாட்டிற்கு வழிவகுக்கும். ஏற்கனவே, ஏப்ரல் 1, 201-8ல் இருந்து மாநிலத்திற்குள்ளேயான பொருட்களின் நகர்விற்கு இ-வே ரசீது அமைப்பின் பயன்பாடு கர்நாடக மாநிலத்தில் செயல்பாட்டில் உள்ளது.
- ரூ. 50,000-க்கும் மேற்பட்ட மதிப்புடைய அனைத்து பொருட்களின் மாநிலத்திற்குள்ளேயான நகர்விற்கு இ-வே ரசீது அமைப்பை ஏப்ரல் 1 முதல் GST

கவுன்சில் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது நினைவில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

- - - - - - - - - - - - - - -